**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம்.சி.ஓ.பி.எண்.292/2016 நாள்.22.11.2022**

2022-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 22-ம் நாள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாபு | தொழில் | |
| த.பெ/க.பெ. | சல்லாஸ் | சாதி | |
| கிராமம் | திருக்கோவிலூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 46 |

**எ.ம.சா.2**
**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்தூர் தாலுக்கா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக எங்கள் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குறற் எண்.410/2018 வழக்கின் கோப்புகளை அழைப்பாணையில் குறிப்பிட்டப்படி எடுத்து வந்துள்ளேன். இவ்வழக்கு விபத்து கடந்த 16.06.2016ல் நடந்துள்ளது. புகார் வாக்குமூலம் 18.06.2016 அன்று மருத்துவமனைக்கு சென்று பெறப்பட்டுள்ளது. புகார் வாக்குமூலம் ஆமினா க/பெ.வாகித்பாஷா என்பவர் கொடுத்துள்ளார். முதல் தகவல் அறிக்கை சிறப்பு உதவி ஆய்வாளர் கார்த்திகேயன் என்பவர் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக தற்போது வரை இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை. சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். விபத்து திருப்பத்துார் டூ திருவண்ணாமலை செல்லும் சாலையில் உள்ள நாகராஜன்பட்டி என்ற இடத்தில் விபத்து நடந்துள்ளது. விபத்து நடந்த இடத்திற்கும் திருப்பத்துாருக்கும் சுமார் 15 கி.மீட்டர் துாரம் இருக்கும். விபத்தில் காயம் பட்டவரின் விபத்து பதிவேடு

கோப்பில் உள்ளது. விபத்து நடந்தது சம்பந்தமாக கோப்பில் உள்ள முதல் தகவல் அறிக்கை, மாதிரிவரைபடம், மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆகியவற்றில் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையில் விபத்தை ஏற்படுத்திய வாகன ஓட்டுனர் பெயர் குறிப்பிடப்படவில்லை. விபத்து ஏற்படுத்திய ஆட்டோவின் பதிவு எண். டிஎன் 23 டிஎக்ஸ் 4461 ஆகும். மேற்படி ஆட்டோவின் வாகன ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமத்தின் நகல் கோப்பில் உள்ளது. அதை இவ்வழக்கில் தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆட்டோ ஓட்டுனருக்கு பேட்ச் நெம்பர் இல்லை என்றால் எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் சரியாக தெரியவில்லை. இது வரை விபத்து சம்பந்தமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யாததற்கு காரணம் முதல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பணிமாறுதலில் சென்று விட்டதுதான் காரணம் ஆகும்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு விபத்தில் வாகித்பாஷா, ஷமீர் அகமது ஆகியோர் காயம் பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் வாக்குமூலம் வாகித் பாஷா என்பவரின் மனைவி ஆமீனா என்பவரிடம் வாங்கப்பட்டது. விபத்தில் காயம் அடைந்தவர்களின் காயச்சான்றிதழ் வாங்கவில்லை. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பியுள்ளோம். காயச்சான்றிதழ் வாங்காததால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யாமல் உள்ளது. விபத்து ஏற்படுத்திய ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமம் சம்பந்தமாக ஆர்.டி.ஓ-வை கேட்டால்தான் தெரியும்.